1986 ஏப்ரல் 25]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்த வகையிலே செயல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அத்தோடு முந்திரி உற்பத்தியைப் பெருக்குவதற்கு 'நபாட்' உதவியோடு தென் ஆற்காடு மாவட்டத்தில் செயல்படுத்தக்கூடிய திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

559—(*வினா எண் 3198)—திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ''முந்திரி வளர்ச்சிக் கழகம்'' அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஏதுமில்லை.

(ஆ) வினா எழாது.

திரு. கே. பாலாஜி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முந்திரியினுடைய விலையை நிர்ணயிப்பதற்கும், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும், எதிர் காலத்திலே யாவது இந்த முந்திரி வளர்ச்சிக் கழகம் அமைக்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அது போன்ற ஒரு அமைப்பு கேரள மாநிலத்திலே ஏற்படுத்தப்பட்டு அதிலே வியாபார ரீதியிலே வெற்றி ஏற்படாததால், நிலைமையை சீர் தூக்கிப் பார்த்து, அந்நிறுவனத்தை மூடிவிட்டதாகத் தெரிகிறது. முந்திரியின் விலையைப் பொறுத்த அளவிலே வெளி நாட்டிலே நிலவக் கூடிய விலையைப் பொறுத்துத்தான், உள் நாட்டிலே முந்திரியின் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆகவே வளர்ச்சிக் கழகம் அமைப்பதால் பயன் இல்லை.

திரு. வி.பி. சிந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எனக்கு தெரிந்த அளவுக்கு கேரளத்திலே உள்ள கழகம் இன்னும் மூடப்படவில்லை என்பதாக அறிகிறேன். அந்த கேஷ்யூநட் கார்ப்பரேஷன் வந்ததற்குப் பிறகுதான், இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படுகிற முந்திரியில் ஒரு கணிசமான அளவிற்கு அங்கே செல்கிறது. வேறு எந்த மாநிலத்திலும் அது இல்லை. ஆகவே தமிழகத்திலே ஒரு கேஷ்யூநட் (Cashewnut) கார்ப்பொரேஷனை அமைத்து, மத்திய அரசிடமிருந்து கோட்டா பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எனக்குத் தரப்பட்டிருக்கிற தகவல்களைப் பொறுத்தவரையில் கேரளத்திலே அந்த நிறுவனம் வியாபார ரீதியில் வெற்றி பெற இயலாத காரணத்தால் தான் மூடப்பட்டிருப்பதாக தகவல் வந்திருக்கிறது. அந்தப் படிப்பினையைத்தான் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, முந்திரியின் விலை நிர்ணயம் என்பது உள்நாட்டிலே செய்யப் படுவதில்லை. வெளிநாட்டிற்குத்தான் நாம் பெரும்பாலும் ஏற்றுமதி செய்கிறோம். ஆகவே வெளிநாட்டிலே நிலவக் கூடிய அந்த விலை நிர்ணயம் பொறுத்துத்தான் இங்கே விலை நிர்ணயம் செய்யக்கூடிய் சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே தான் அப்படிப் பட்ட ஒரு வளர்ச்சிக்கு கழகத்தால் பயன் இல்லை என்று அரசு கருதுகிறது.

குடிநீர் வடிகால் வாரியம்.

560—வினா எண். 4460—திரு. கி. வெங்கடாசலம் : திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நான்கு வட்டாரங்களாக பிரித்து திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தலைமையகமாகக் கொண்டு செயல்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலூரைத் தலைமையகமாகக் கொண்ட வட்டாரத்திற்கு சென்னையிலேயே தலைமையகத்தை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) : மதுரையைத் தலைமையகமாகக் கொண்டு தெற்கு மண்டலம் 15—9—1985 முதல் செயல்பட்டு வருகிறது. திருச்சியைத் தலைமையகமாகக் கொண்டு மத்திய மண்டலமும், கோயம்புத் தூரை தலைமையகமாகக் கொண்டு மேற்குமண்டலமும், வேலூரைத் தலைமையகமாகக் கொண்டு வடக்கு மண்டலமும் 1986 ஏப்ரல் மாதம் முதல், செயல்பட குடிநீர் வடிகால் வாரியம் ஏற்பாடுகள் செய்துள்ளது. வேலூருக்குப் பதிலாக சென்னையை தலைமையகமாக ஏற்படுத்தும் கருத்து இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 4 வட்டாரங்களாகப் பிரிப்பதனால் தற்போது என்னென்ன மாற்றங்கள், திட்டங்கள் வரப் போகின்றன ? அதனால் அரசுக்கு என்ன செலவு ஆகிறது ? மேலும் அப்படிப் பிரித்ததன் காரணமாக சென்னை தலைமை அலுவலகத்தில் பணிபுரிந்த அரசு ஊழியர்களை அவர்களுடைய